මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01.
ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01.
இலங்கை
The Secretariat, Colombo 01.
Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office } (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website } www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. } BD/CBP/01/01/02 - 2021
ඔබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 2022.04.01

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல: 02/2022**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள்
அனைவருக்கும்

**2022 செலவினத்திற்கான அங்கீகாரம் மற்றும் அரசாங்க செலவின முகாமை – 2022 இரண்டாவது காலாண்டு**

2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கமைவாக 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்காக திரட்டு நிதியத்திலிருந்து நிதியினை விடுவிப்பது தொடர்பாக அங்கீகாரம் வழங்கி இரண்டாவது காலாண்டுக்காக செலவினத்தினை மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் உரிய ஆணைப்பத்திரம் அரசியலமைப்பின் 150(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதி அமைச்சரினால் கையொப்பமிடப்பட்டுள்ளது.

02. இதன் அடிப்படையில், 2022 ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதி முதல் யூன் மாதம் 30 ஆந் திகதி வரையான இரண்டாவது காலாண்டுக்குள் கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் ஏனைய ஆவணங்களில் பின்வருமாறு உரிய அதிகாரம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) பொதுச் சேவைகள் - 2022 இன் 2ம் இலக்க பொது ஆணைப்பத்திரம்
(ஆ) விசேட சட்டச் சேவைகள் - 2022 இன் 2ம் இலக்க விசேட சட்ட ஆணைப்பத்திரம்
(இ) முற்பணக் கணக்கு செயற்பாடுகள் - 2022 இன் 2ம் இலக்க முற்பண ஆணைப்பத்திரம்

03. அரசாங்க அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கு மேலதிக நிவாரணங்களை வழங்கியதன் காரணமாக அரசாங்க செலவினம் அதிகரித்ததன் விளைவாகவும் அரசாங்க வருமானத்தினை உத்தேசிக்கப்பட்டவாறு திரட்டுவதற்கு முடியாமையினாலும் வருடத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட அரசாங்க நிதி ஏற்பாடுகள் மேலும் குறைவடைந்ததன் காரணமாக வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகள் மிகவும் சவால் நிறைந்ததாகக் காணப்படுகிறது. மேலும் புதிய கருத்திட்டங்களுக்கான மேலதிக ஒதுக்கீட்டுக் கோரிக்கைகள் 2022 வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் தவிர்க்கப்பட்டுள்ளது. இதனால், வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படாத கருத்திட்டங்கள் மற்றும் உள்நாட்டு

நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் முன்னுரிமையல்லாத கருத்திட்டங்களுக்கான பொறுப்புக்களை உருவாக்குவது இடை நிறுத்தப்பட்டுள்ளது என்பதுடன், அவ்வாறான கருத்திட்டங்களுக்கான நிதி ஏற்பாட்டுக் கோரிக்கைகளுக்கான அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்க வேண்டாமெனவும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. இதற்கு மேலதிகமாக, திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்களை எதிர்பார்த்தவாறு செயற்படுத்துகின்ற போது தற்போதய சந்தை நிலைமைக்கு அமைவாக ஏற்பட முடியுமான தடங்கல்கள் தொடர்பாக கவனத்திற் கொண்டு அவற்றினை செயற்படுத்துவதற்கு ஏற்றவாறு பொருத்தமான தீர்மானங்களை எதிர்காலத்தில் மேற்கொள்வது தொடர்பிலும் செயலாளர்கள் போதிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

05. வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 03/2021 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் மேலதிகமாக எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறே தொடர்ந்து பயன்வலுப்பெறும்.

**ஒப்பம்/**
**எஸ்.ஆர். ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு